அமைப்பது? இதற்கு ஆய்வு நடத்த வேண்டியதில்லை. நானே நேரில் வருகிறேன். நாம் இருவரும் அதனைப் பார்வையிடலாம். இடத்தைக் காட்டுங்கள்; நாங்கள் செய்து தருகிறோம். எங்களுடைய நிலைமை அதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் 38 மாவட்டங்களிலும் ஆய்வு செய்து, சுற்றுலா அலுவலர் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கியமான 10 இடங்களைத் தேர்வு செய்துதரும்படி கேட்டோம். அந்தப் பட்டியலைப் பெற்றுள்ளோம். நிச்சயமாக அந்தப் பட்டியலில் நீங்கள் சொல்வதும் வந்திருக்கும். இல்லையென்றாலும், தாங்கள் ஒரு கடிதத்தைக் கொடுங்கள். நிச்சயமாக ஆய்வு செய்து, நிதியாதாரத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப்பெற்று, அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

208—

ஆரம்ப சுகாதார நிலையம்

***39153—திரு. A.G. வெங்கடாசலம்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், மைக்கேல்பாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2023 அக்டோபர் 9]

மைக்கேல்பாளையம் ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் சின்னதம்பிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அதேபோல், 3 கிலோ மீட்டர் தொலைவில் அந்தியூர் அரசு மருத்துவமனை ஒன்றும் செயல்பட்டு வருவதால், மைக்கேல்பாளையம் ஊராட்சியில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் அவர்கள்.*

திரு. A.G. வெங்கடாசலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமங்களுக்கு வருகை தந்து, இரண்டு நாட்கள் தங்கியிருந்து, 20 கிலோ மீட்டர் நடந்தே சென்று, 16 மலைக் கிராம மக்களைச் சந்தித்து, குறைகளைக் கேட்டறிந்து, அன்றே நடமாடும் மருத்துவக் குழுவுடன் வேன், தாய்–சேய் நல ஊர்தி, 108 ஆம்புலன்ஸ், அமரர் ஊர்தி ஆகியவற்றை வழங்கியும், அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு ரூபாய் 5½ கோடி மதிப்பீட்டிலே போதிய படுக்கை வசதியுடன் இரத்த சேமிப்பு வங்கியும் அமைத்திட உத்தரவு வழங்கி, பணிகள் துவங்கிடும் நிலையில் உள்ளன. அதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலே அரசு விதிமுறைகளின் அடிப்படையில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திடும் வாய்ப்பும், அவசரத் தேவையும் உள்ளது. அத்தாணி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட பிரம்மதேசம் மற்றும் வேம்பத்தி ஊராட்சிகளின் மக்கள்தொகை மொத்தம் 30,000. அந்த இரண்டு ஊராட்சிகளின் மக்களும் பயன்படும்வகையில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும். பர்கூர் மலைக் கிராமத்திலுள்ள தேவர் மலை, பெஜலட்டி, வெள்ளி மலை, ஈரெட்டி மலைவாழ் மக்கள் 35 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பர்கூர் ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல*

வேண்டியுள்ளது. இதனால் தாமரைக்கரையில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி போதும். மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைக்கேல்பாளையம் ஊராட்சி என்பது அந்தியூர் ஒன்றியத்தைச் சார்ந்தது. இந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே, அத்தாணி, பர்கூர், சின்னதம்பிபாளையம், எண்ணமங்கலம் மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மைக்கேல்பாளையம் ஊராட்சியைப் பொறுத்தவரை, 6,473 மக்கள்தொகை இருக்கிறது. இந்தப் பகுதியில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தத் துணை சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்திலே இருக்கிற எண்ணமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு eSanjeevani திட்டத்தின்கீழ் தொடர்பு ஏற்படுத்தி, அந்தக் கிராமத்து மக்களுக்குரிய மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்குவதற்கு 30,000 மக்கள்தொகை வேண்டும், 8 கிலோ மீட்டர் இடைவெளியில் வேறு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கக்கூடாது என்பது விதி, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் அவர்கள்.

திரு. A.G. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மலைவாழ் பகுதியான தாமரைக்கரையில் மட்டும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலை ஏற்று, ஒன்றிய அரசின்

2023 அக்டோபர் 9]

அனுமதி பெற்று, தாமரைக்கரை பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி அரசு மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டபோதிலும், அதற்கான அடிப்படை வசதிகள், கட்டமைப்பு வசதிகள் எதுவும் இல்லை. அங்கு மொத்தம் 6 பொது மருத்துவர்கள், ஒரு பல் மருத்துவர் மற்றும் ஒரு சித்த மருத்துவர் இருந்தாலும், அடிக்கடி பணியிட மாற்றம் செய்வதால்,* long leave-*ல் மருத்துவர்கள் செல்வதால், போதிய மருத்துவர்கள் அங்கு இருப்பதில்லை.* Maximum *2 அல்லது 3 மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். அங்கு அதிகமான* patients *வருகிறார்கள். ஆனால், அவர்களை* attend *செய்வதற்கு* doctors sufficient numbers-*ல் இல்லை. அதன் பிறகு,* X-ray machine work *ஆகவில்லை;* scan machine work *ஆகவில்லை;* lab equipment *சரியாக இல்லை. இதனால்* fracture cases *வந்தாலும்,* accident cases *வந்தாலும், கரூர் செல்லுங்கள், ஈரோடு செல்லுங்கள் என்று அனுப்புகிறார்கள்.* Scan *வசதி இல்லாததால், ஒன்று, வெளியில் சென்று* scan *செய்ய வேண்டியுள்ளது; இல்லையென்றால், கரூர் அல்லது ஈரோடு செல்ல வேண்டியுள்ளது. அதனால், மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. ஒரு கேள்வி, துணைக் கேள்வி.* Scan *வசதி வேண்டுமென்று கேட்கிறீர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *அதேபோன்று,* Sufficient doctors *வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Good. *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடி அரசு மருத்துவமனையில் 6 மருத்துவர்கள் மற்றும் ஒரு பல் மருத்துவர் பணியில்*

இருப்பதாகவும், அதில் ஓரிரு மருத்துவர்கள் அடிக்கடி விடுப்பில் செல்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்த மாவட்ட சுகாதார அலுவலர்களோடு நிச்சயம் கலந்துபேசி, விடுப்பில் செல்பவர்களுக்குப் பதிலாக புதிய மருத்துவர்களை அங்கே இட மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், அதேபோல் பழைய X–ray வசதி என்பதற்குப் பதிலாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலை ஏற்று, இப்போது படிப்படியாக digital X–ray அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில், கொடுமுடி அரசு மருத்துவமனையில் ஒரு புதிய digital X–ray அமைப்பதற்குரிய நடவடிக்கைகளும், புதிய scan வசதி ஏற்படுத்தித் தருவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் தொகுதியில் எங்களுடைய கோரிக்கையை ஏற்று, திருக்கண்ணபுரம், திருப்பயத்தங்குடி, கணபதிபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், நாகூர் ஆண்டவர் அரசு மருத்துவமனைக்கும் புதிய கட்டடம் கட்டுவதற்கு அறிவிப்பு செய்யப்பட்டது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், ஐந்து மாதங்களாகியும் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, பணிகளை விரைந்து தொடங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அதுபோல, திருமருகல் ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய கட்டடம் இடிக்கப்பட்டிருக்கிறது. அங்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும். ஏனங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் புதிய கட்டடம் கட்ட வேண்டும். நாகப்பட்டினத்தைப் பொறுத்தளவில் போதிய மருத்துவர்கள் இல்லை என்கின்ற பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, உரிய மருத்துவர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 அக்டோபர் 9]

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பிற்கினிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல அவர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்குரிய திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினர் அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். மிக விரைவில் கட்டடங்களுக்கான அந்தப் பணிகள் தொடங்க அறிவுறுத்தப்படும்.

மேலும், மருத்துவர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், MRB ஆல் தேர்வு செய்யப்படவிருக்கிற மருத்துவர்களைக்கொண்டு மிக விரைவில் அங்கே காலிப் பணியிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பிரெட்டிப்பட்டி அரசு வட்டார மருத்துவமனையில் dialysis செய்வதற்கு machine இல்லையென்று கடந்த கூட்டத் தொடரில் கூறினேன். அதற்குண்டான RO system-த்தை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் கொடுத்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், இன்றுவரை அந்த machine வரவில்லை. Dialysis செய்ய வேண்டுமென்றால் அங்கிருந்து 52 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தருமபுரி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

அதேபோல, அங்கு எத்தனை குழந்தைகள் இந்த ஆண்டு பிறந்தன என்று பார்த்தோம் என்று சொன்னால், அந்த மருத்துவமனையில் மூன்று குழந்தைகள் மட்டும்தான் பிறந்திருக்கின்றன. காரணம், அங்கு மகப்பேறு மருத்துவர் இல்லையென்று உங்கள் அறிக்கையில், அங்கே மாவட்ட அலுவலகத்தில் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அங்கு மகப்பேறு மருத்துவரை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல Ambulance. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் எழுதிக் கொடுத்தும்கூட, அதற்கு விதி இல்லையென்று சொல்கிறார்கள். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து

25 இலட்சம் ரூபாயை எழுதிக் கொடுத்தும் அங்கு Ambulance *வசதியில்லை. அதற்காக நாங்கள் கொடுத்தும் நீங்கள் தவிர்த்திருக்கிறீர்கள். அதை வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை எதற்குப் பயன்படுத்தலாம் என்று விதி இருக்கிறது. அந்த வழிகாட்டுதலில் இருந்தது என்றால் அதைச் சேர்த்துக்கொள்வார்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *இல்லை, நாங்கள்* relaxation-*தான் கேட்கிறோம். ஏனென்றால், மூன்றே குழந்தைகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Relax *செய்வது என்பது அது அடுத்த கேள்வி. இந்தக் கேள்வி உங்களுக்கு இப்போது. . . (குறுக்கீடு) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 108* Ambulance-*ஐப் பொறுத்தவரைக்கும், 1,333* Ambulance-*கள் செயல்பாட்டில் இருக்கின்றன. ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் புதிய* Ambulance-*களை தமிழ்நாட்டில் இயக்கி வைத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அதை வாங்குவதற்குரிய விதிமுறைகள் இல்லை. இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியை, 25 இலட்சம் ரூபாயைத் தந்திருப்பதாகச் சொல்கிறார். அந்த 25 இலட்சம் ரூபாயை வேறு ஒரு பயன்பாட்டிற்கு மாற்றி, அந்தக் கடிதத்தை எழுதித் தருவாரேயானால் அதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.*

அதேமாதிரி, RO system-*த்திற்கு ஏற்கெனவே அவர் கடிதம் தந்திருப்பதாகச் சொல்கிறார்.* Dialysis-*ஐப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு 100 புதிய இயந்திரங்களையும், இந்த ஆண்டு 50 இயந்திரங்களையும் தந்து, எங்கேயெல்லாம் புதிய* dialysis

இயந்திரங்கள் வேண்டுமோ அங்கே தந்து கொண்டிருக்கிறோம். அந்தவகையில், பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கும் அந்த RO system இயங்குமானால், அங்கிருக்கின்ற தேவைக்கேற்ப 3 அல்லது 4 dialysis இயந்திரங்கள் மிக விரைவில் பொருத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

209—

பேருந்து வசதி

***58101—திரு. ஈ. பாலசுப்ரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், பாரத ரத்னா M.G.R. புதிய பேருந்து நிலையத்திலிருந்து AVR ரவுண்டானா வழியாக புறவழிச் சாலையில் அம்மாபேட்டை ரவுண்டானா வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம், பாரத ரத்னா M.G.R. புதிய பேருந்து நிலையத்திலிருந்து AVR ரவுண்டானா வழியாக புறவழிச் சாலையில் அம்மாபேட்டை ரவுண்டானா வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன் அவர்கள்.

முற்பகல் 11–30

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு முன்னாள்